தேவி மண்டீர் என்றழைக்கப்படும் தெய்வீகத்தன்மை வாய்ந்த அன்னை திருக்கோயிலில் ஆன்மிகத்தை தேடும் அடியார்களால் நிறைவேற்றப்படும் எட்டு விதமான நன்னடத்தைகள் சார்ந்த அறிவினை பண்படுத்துவதோடு, அதை எவ்வாறு கடைபிடிப்பது என்பதனை உருவாக்குகிறோம். நம்மை சூழ்ந்த பூமியில் இருந்து நாம் மனத்திருப்தி, சாந்தி மற்றும் மகிழ்ச்சியினைத் தேட வழி வகுப்போம். சனாதன தர்மம் ஆனது, (ஆதி அந்தமில்லா சீரிய பூரணத்துவம்) சாந்தி என்பது நம்முள் அமைந்துள்ளது என்று போதிக்கிறது. இக் கோயிலின் ஆன்மீக குருக்களான ஸ்ரீ மாவும் சுவாமிஜி அவர்களும் நாம் இத்தகைய சாந்தியையும் அமைதியையும் பெற உதவுவர். சனாதன தர்மமானது துள்ளிதமான மிக உயர்ந்த தெய்வீக நிலையில் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியும் நிறைவு செய்யும் வாழ்வின் வழிக்காட்டி மார்க்கமாகும். அதற்கான அத்யாவசிய ஏதுவாக அமைவது கவனம்; நம்முடைய ஒவ்வொரு செயல்பாடுகளிலும் கவனம் தேவை. கவனமாக சீர்தூக்கி பார்க்கின், சூழ்நிலைக்கேற்ப நாம் நடவடிக்கை எடுப்பதற்கு முன் காரண காரியங்களை மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். நம்முடைய படைப்பின் நோக்கத்தை உற்று நோக்க, ஆராய சீரிய மதிப்பீடு வழி காட்டுவதோடு, நாம் பரிசுத்தமான பிறவிகள் என்பதை அறியவும், உணரவும் நம்முள் மற்றும் நம்மைச்சுற்றி அமைந்துள்ள தெய்வீக தன்மையை வழிபட மன ஆற்றல் அமைய பெற்றுள்ளோம். இத்தகைய ஈடுபாடன கவனமானது தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தப்படுமானால், இந்த விதையானது மனத்தை ஒருமுகப்படுத்தப்படுமானால், இந்த விதையானது மனதை ஒருமுகப்படுத்தும் விருட்சமாக வளர்வதோடு, தியான நிலைக்கும் சமாதி நிலையில் அதன் சிகரத்திற்கும் இட்டுச் செல்லும்.

ஸ்ரீ மா மற்றும் சுவாமி சத்யாநந்தா சரஸ்வதியின் அடிப்படை போதனை ஒவ்வொரு இல்லமும் ஒரு கோயில் எனவும், அதனுள் குடியிருப்பாளர் அனைவரும் அர்ச்சகர்கள் அதன் ஆன்மீக குரு ஊக்கமளிக்கும் தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டு எனவும் மற்றும் எங்கு போதனை நடைபெறுகிறதோ அங்கு ஆன்மீக குரு இடம்பெறுவார்.

மேலும் யாராவது ஒரு செயலை போற்றத்தக்க அக்கறையுடனும், கவனமுடனும், நேர்மையுடனும் ப க்தியுடனும் செயல்படுத்துவாரானால் அவர் கடவுள் வழிபாடு செய்வதாகக் கொள்ளப்படும். நாம் சிறப்பான வழிபாடு செய்வதற்கு விரும்பி பயன் அளிக்கக் கூடிய வாழ்க்கை வாழ்தல் வேண்டும். நம்முடைய உயர் லட்சிய பரிமாண வளர்ச்சியைத் தற்காப்பதற்கு இஃது அடிப்படையாகவும், ஆதாரமாகவும் அமையும்.

சனாதன தர்மமானது மனோசக்தியின் அபிவிருத்தியை வலியுறுத்துவதாகவும், நம்முள்ளும், நம்மைச் சுற்றியும் நிறைந்துள்ள ஆன்ம சக்தியை உணர அர்ப்பணிப்புத் திறனை உணர்த்துவதாகவும் உள்ள வாழ்க் கை வழிகாட்டல் ஆகும். சுவாமிஜியின் கூற்றுப்படி இறைவழிபாடு என்பது கவனம் செலுத்துவது என்பதாகும். நாம் யாரையாவது அல்லது எதையாவது நேசிக்கிறோம் என்றால் நாம் கவனம் செலுத்துகிறோம் என்று பொருள்படும். நம்முடைய முழு கவனத்தையும் ஒருமுகப்படுத்துதலை தியானம் என்று சொல்லப்படுகின்றது. தியானத்தை கடைபிடிப்பதன் வழி, எப்படி கற்பது, பிறரை எப்படி நேசிப்பது, பிறரை எப்படி மதிப்பது, எப்படி இறை வழிபாடு செய்வது, எப்படி கவனத்தை செலுத்துவது, எப்படி நம் வாழ்வின் ஒவ்வொரு செயலின் திறனை வளர்ப்பது என்பதை கற்றுக் கொள்கிறோம். மேற்கூறப்பட்ட கூற்று க்கான அடிப்படை தகுதி, ஏற்புடைய அதீத கவனம் செலுத்துதல் ஆகும். மேலும் பயன் தக்க வகையில் மேற்கொள்ளப்படும் எத்தகைய போற்றத்தக்க சீரிய கவனமும் இறைவழிபாடு ஆகும். இந்த விளக்கத்தின் வழி நேர்மையான மதிப்பு மிக்க கவனம் கடைபிடிக்கப்படும். ஒவ்வொரு மாதா கோவில், பள்ளிவாசல், கோயில், வேலை இடங்கள், இல்லங்கள் போன்ற ஒவ்வொரு இடத்திலும் இறை வழிபாடு இடம் பெறுகிறது.